# **Principal District Munsif Court, Sankarankovil.**
# **EP.No.17/2021 in OS.No.113/2006**

தேதி : 13.02.2025

எ.ம.சா.2- செல்லதுரை

**வா.சா.1 மீண்டும் ஆஜர். சத்தியப்பிரமாண வாக்குமூலத்தின்பேரில் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :-**

எனக்கு சாட்சியம்அளிக்க நீதிமன்றத்திலிருந்து சம்மன் வந்தது. எந்தத் தேதியில் சம்மன் வந்தது என்றால் 1 மாதம் இருக்கும். எனக்கு வழங்கப்பட்ட சம்மன் தற்போது என்கைவசம் உள்ளதா என்றால் இல்லை. எனக்கு வழங்கப்பட்டதாக சொல்லும் சம்மன் தபால் மூலமாக வந்ததா அல்லது நீதிமன்ற ஊழியர்கள் மூலமாக வந்ததா என்றால் நீதிமன்ற ஊழியர் மூலம் வந்தது. எனக்கு எங்கு வைத்து சம்மன் வழங்கப்பட்டது என்றால் அச்சம்பட்டி கிராமத்தில் வைத்து எனக்கு சம்மன் வழங்கப்பட்டது. எதிர்மனுதாரர் குருசாமி எனக்கு தெரிந்த நபர். உறவினர் இல்லை. எதிர்மனுதாரர் குருசாமியிடன் சென்று நான் பணம் கொடுத்ததாக சொல்வது யாரிடம் கொடுத்தோம் என்றால் வேலுச்சாமி கோனாரிடம் பணத்தைக் கொடுத்தோம். மேற்சொன்ன வேலுச்சாமிகோனார் வாடிக்கோட்டை கிராமத்தைச் சேர்ந்தவர். வேலுச்சாமிகோனாரின் வீடு வாடிக்கோட்டை கிராமத்தில் எந்தத் தெருவில் உள்ளது என்றால் தெரு பெயர் தெரியாது. ஆனால் அவருடைய வீடு தெற்கு பார்த்த வீடு. அதற்கு முன்பு வேலுச்சாமிக்கோனாரை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். அவர் TVS 50 வாகனத்தில்வந்து செல்வார். வேலுச்சாமிக்கோனாரின் தந்தை பெயர் பிச்சையா கோனாரா என்றால் எனக்குத் தெரியாது.

என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் கூறியுள்ள தேதியான 30.09.2013 தேதியில் நான் வேலுச்சாமிக்கோனாரை பார்த்து அவரிடம் பணம் கொடுத்தேனா என்றால் ஆமாம். எனக்கு எழுதப்படிக்கத் தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஆவணம் வேலுச்சாமிக்கோனாரின் இறப்புச் சான்றிதழ் என்றால் எனக்குத் தெரியாது. நான் என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள 30.09.2013 தேதியில் வேலுச்சாமிக்கோனார் உயிருடன் இல்லை என்றால் சரியல்ல. வேலுச்சாமிக்கோனார் 20.05.2013 தேதியிலேயே இறந்துவிட்டார் என்றால் சரியல்ல. வேலுச்சாமிக்கோனாரின் இறப்பு 23.05.2013 ம் தேதியிலேயே பதிவு செய்யப்பட்டு விட்டது என்றால் சரியல்ல.

எனவே இறந்துபோன நபரிடம் நாங்கள் பணம் கொடுக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. இறந்துபோன நபரிடம் பணம் கொடுத்ததாக நான் நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் பொய்யாக அளிக்கக்கூடிய சாட்சியத்திற்கு குற்றவியல் நடவடிக்கை எடுக்க உரிமையை மனுதாரர்கள் தக்கவைத்துக்கொள்வார்கள் என்றால் சரியல்ல. நான் எதிர்மனுதாரருக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை : இல்லை.</u>**

(Sd.) xxxxxxx
Principal District Munsif,
Sankarankovil.